## இனிமையான குழந்தைகளே! வினாசத்திற்கு முன்பாகவே அனைவருக்கும் தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும், தாரணை செய்து பிறருக்குப் புரிய வைத்தீர்கள் என்றால் உயர் பதவி கிடைக்கும்.

கேள்வி: இராஜயோகி மாணவர்களுக்கு தந்தையின் வழி காட்டுதல் (கட்டளை) என்ன?

பதில்: ஒரு தந்தையினுடையவராக ஆகிவிட்ட பிறகு மற்றவர் மீது மனதை ஈடுபடுத்தக் கூடாது என்பது உங்களுக்கான கட்டடளையாகும். உறுதி மொழி எடுத்த பின் தூய்மையற்றவராக ஆகக் கூடாது. தந்தை மற்றும் ஆசிரியரின் நினைவு தானாகவே நிரந்தரமாக உருவாகி இருக்கும் அளவு சம்பூரண (முழுமையான) தூய்மையானவராக ஆகி விடுங்கள். ஒரு தந்தையிடம் மட்டும் அன்பு வையுங்கள். அவரையே நினைவு செய்தீர்கள் என்றால், உங்களுக்கு அதிகமாக சக்தி கிடைத்தபடி இருக்கும்.

ஓம் சாந்தி. ஆன்மீகத் தந்தை வந்து புரிய வைக்கிறார். இந்த சரீரத்தில் இருக்கும் போது புரிய வைக்கிறார். முன்னால் இருந்தபடிதான் புரிய வைக்கப்படுகிறது முன்னால் இருந்து புரிய வைக்கப் படுபவைகள் பிறகு எழுதப்பட்டு அனைவரிடமும் செல்கிறது. நீங்கள் இங்கே நேரடியாக கேட்பதற் காக வருகிறீர்கள். எல்லைக் கப்பாற்பட்ட தந்தை ஆத்மாக்களுக்கு சொல்கிறார். ஆத்மாதான் கேட்கிறது. இந்த சரீரத்தின் மூலமாக அனைத்தும் ஆத்மாதான் செய்கிறது, ஆகையால் முதன் முதலில் தன்னை ஆத்மா என புரிந்து கொள்ள வேண்டும். ஆத்மாக்களும் பரமாத்மாவும் வெகு காலமாகப் பிரிந்திருந்தனர் என்று பாடல் உள்ளது. அனைவரையும் விட முதன் முதலாக தந்தை யிடமிருந்து யார் பிரிந்து நடிப்பதற்காக வருகின்றனர்? எவ்வளவு காலம் நீங்கள் தந்தையைப் பிரிந்திருந்தீர்கள் என்று உங்களிடம் கேட்பார்கள். அப்போது நீங்கள் 5000 வருடங்கள் என்று சொல்வீர் கள். கணக்கு முழுமையாக இருக்கிறது அல்லவா? எப்படி வரிசைக்கிரமமாக வருகின்றனர் என்பது குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். இப்போது உங்கள் அனைவரின் பேட்டரியும் சார்ஜ் செய்வதற்காக, மேலே இருந்து தந்தையும் கீழே வந்து விட்டார். இப்போது தந்தையை நினைவு செய்ய வேண்டும். இப்போது தந்தை முன்னால் இருக்கிறார் அல்லவா? பக்தி மார்க்கத்தில் தந்தை யின் தொழிலைப் பற்றி யாருக்கும் தெரியாது. பெயர், உருவம், தேசம், காலத்தைப் பற்றி தெரியவே தெரியாது. உங்களுக்கோ பெயர், உருவம், தேசம், காலம் அனைத்தும் தெரியும். இந்த ரதத்தின் மூலமாக தந்தை நமக்கு அனைத்து ரகசியங்களையும் புரிய வைக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். படைப்பவர் மற்றும் படைப்பின் முதல் இடை கடைசியின் ரகசியத்தைப் புரிய வைத்திருக்கிறார். இது எவ்வளவு சூட்சுமமாக இருக்கிறது. இந்த மனித சிருஷ்டி ரூபத்தின் மரத்தின் விதை வடிவம் தந்தைதான் ஆவார். அவர் இங்கே கண்டிப்பாக வருகிறார். புது உலகை ஸ்தாபனை செய்யும் வேலை அவருடையதுதான் ஆகும். அங்கிருந்தபடியே ஸ்தாபனை செய்கிறார் என்பது அல்ல. பாபா இந்த உடல் மூலமாக நமக்கு நேரடியாகப் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். இதுவும் தந்தை தன் அன்பைக் காட்டுவதாகும் அல்லவா? வேறு யாருக்கும் அவரது வாழ்க்கை வரலாறு தெரியாது. ஆதி

சனாதன தேவி தேவதா தர்மத்தின் தர்ம சாஸ்திரம் கீதை ஆகும். இந்த ஞானத்திற்குப் பிறகு வினாசம் ஏற்படும் என்பதும் கூட உங்களுக்குத் தெரியும். வினாசம் கண்டிப்பாக நடக்க வேண்டும். மற்ற தர்ம ஸ்தாபகர்கள் வரும் போது வினாசம் ஆவதில்லை. வினாசத்தின் காலமே இப்போதுதான் ஆகும், ஆகையால் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஞானம் பிறகு முடிவுக்கு வந்து விடுகிறது. இந்த அனைத்து விசயங்களும் குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் உள்ளது. நீங்கள் படைப்பவர் மற்றும் படைப்பைக் குறித்து தெரிந்து கொண்டுவிட்டீர்கள். இருவருமே அனாதியாக (ஒவ்வொரு காலத்திலும்) நடித்து வருகின்றனர். தந்தையின் நடிப்பே சங்கமத்தில் வருவதாகும். பக்தி அரைக் கல்பம் நடக்கிறது, ஞானம் இருப்பதில்லை. ஞானத்தின் ஆஸ்தி அரைக் கல்பத்திற்கு கிடைக்கிறது. ஞானம் ஒரே ஒருமுறை சங்கம யுகத்தில் கிடைக்கிறது. உங்களுடைய இந்த வகுப்பு (கல்வி) ஒரே முறைதான் நடக்கிறது. இந்த விசயங்களை நல்ல விதமாகப் புரிந்து கொண்டு பிறருக்கும் புரிய வைக்க வேண்டும். பதவியின் ஆதாரம் சேவை செய்வதில் தான் உள்ளது. முயற்சி செய்து இப்போது புதிய உலகிற்குச் செல்ல வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். தாரணை செய்து பிறகு மற்றவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் - இதில்தான் உங்கள் பதவிக்கான ஆதாரம் இருக்கிறது. வினாசம் ஆவதற்கு முன்பு அனைவருக்கும் தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும் மற்றும் படைப்பின் முதல், இடை, கடைசியின் அறிமுகம் கொடுக்க வேண்டும். பல பிறவிகளின் பாவங்கள் நீங்க வேண்டும் என்று நீங்களும் தந்தையை நினைவு செய்கிறீர்கள். தந்தை படிப்பிக்கும் இறுதி நாள் வரை கண்டிப்பாக நினைவு செய்ய வேண்டும். கற்பிப்பவருடன் நினைவின் தொடர்பு இருக்கும் அல்லவா? ஆசிரியர் படிப்பிக்கும் போது அவருடன் நினைவின் தொடர்பு (யோகம்) இருக்கும். யோகம் இல்லாமல் எப்படி கற்பிப்பார்கள்? யோகம் என்றால் கற்பிப்பவரின் நினைவு. இவர் தந்தையும் ஆவார், ஆசிரியரும் ஆவார், சத்குருவும் ஆவார். மூன்று ரூபங்களிலும் முழுமையாக நினைவு செய்ய வேண்டியுள்ளது. இந்த சத்குரு உங்களுக்கு ஒரு முறைதான் கிடைக்கிறார். ஞானத்தின் மூலம் சத்கதி கிடைத்தது என்றால் அவ்வளவுதான், பிறகு குருவை ஏற்றுக் கொள்ளும் வழக்கமே முடிந்து விடும். தந்தை, ஆசிரியரின் வழக்கம் நடக்கும், குருவைப் பின்பற்றும் வழக்கம் (சத்யுகத்தில்) முடிந்து விடும். சத்கதி கிடைத்து விட்டது அல்லவா? நடைமுறையில் நீங்கள் நிர்வாண தாமத் திற்குச் செல்வீர்கள், பிறகு தனது சமயத்தில் நடிப்பை நடிக்க வருவீர்கள். முக்தி, ஜீவன்முக்தி இரண்டும் கிடைத்து விடுகிறது. முக்தியும் கண்டிப்பாக கிடைக்கிறது. சிறிது சமயத்திற்கு வீட்டிற்குச் சென்று இருப்பீர்கள். இங்கேயோ சரீரத்துடன் நடிப்பை நடிக்க வேண்டியுள்ளது. கடைசியில் அனைத்து நடிகர்களும் வந்து விடுவார்கள். நாடகம் முடிந்து விடும்போது அனைத்து நடிகர்களும் மேடையில் வந்து விடுகின்றனர். இப்போதும் கூட அனைத்து நடிகர்களும் மேடையில் வந்து கூடியுள்ளனர். எவ்வளவு கடுமையான யுத்தமாக இருக்கிறது. சத்யுகத்தின் ஆரம்பத்தில் இவ்வளவு கடுமையான சண்டை இருக்கவில்லை. இப்போது எவ்வளவு அசாந்தி உள்ளது. ஆக இப்போது தந்தையிடம் சிருஷ்டி சக்கரத்தின் ஞானம் இருப்பது போல குழந்தைகளுக்கும் உள்ளது. (சிவபாபா) விதைக்கு ஞானம் உள்ளதல்லவா - என்னுடைய மரம் எப்படி வளர்ச்சியடைந்து பிறகு முடிவடை கிறது. இப்போது நீங்கள் புதிய உலகின் நாற்றை நடுவதற்காக அதாவது ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தின் நாற்றை நடுவதற்காக அமர்ந்திருக்கிறீர்கள். இந்த லட்சுமி

நாராயணர் எப்படி இராஜ்யத்தை அடைந்தனர் என்று உங்களுக்குத் தெரியும். நாம் இப்போது புதிய உலகின் இளவரசன் ஆகப் போகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த உலகில் இருப்பவர்கள் அனைவருமே தன்னை எஜமான் என்று தான் சொல்வார்கள் அல்லவா? இப்போதும் கூட பாரதம் எங்களது தேசம் என்று அனைவரும் சொல்கிறார்கள் அல்லவா? நாம் இப்போது சங்கமத்தில் இருக்கிறோம், நாம் சிவாலயத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் என்று நீங்கள் புரிந்துள்ளீர்கள். இப்போது போயே சேர்ந்து விட்டோம். நாம் சென்று சிவாலயத்தின் எஜமான் ஆகப் போகிறோம். உங்களுடைய இலட்சியமே இதுதான். ராஜா ராணி போல பிரஜைகள், அனைவரும் சிவாலயத்தின் எஜமான் ஆகி விடுகின்றனர். மற்றபடி இராஜ்யத்தில் வித விதமான அந்தஸ்து (நிலைகள்) இருக்கவே செய்யும். அங்கே அமைச்சர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். தூய்மையற்றவராக ஆகும்போது அமைச்சர்கள் இருப்பார்கள். லட்சுமி-நாராயணர், ராமன்- சீதை இவர்களின் அமைச்சர்கள் இருந்ததாக கேள்விப் பட்டிருக்க முடியாது, ஏனென்றால் அவர்கள் தாமே சதோ பிரதானமாக தூய புத்தியுள்ளவர்களாக இருப்பார்கள். பிறகு தூய்மையற்றவராக ஆகும்போது ராஜா-ராணி ஒரு அமைச்சரை ஆலோசனை பெறுவதற்காக வைத்துக் கொள்வார்கள். இப்போது பாருங்கள், பல அமைச்சர்கள் இருக்கின்றனர்.

இது மிகவும் மகிழ்ச்சியான விளையாட்டு என குழந்தைகள் அறிவார்கள். விளையாட்டு எப்போதும் மகிழ்ச்சிக்காகவே இருக்கும். சுகமும் இருக்கும், துக்கமும் இருக்கும். இந்த எல்லைக்கப்பாற்பட்ட விளையாட்டைப் பற்றி குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். இதில் அடித்துக் கொள்ள, அழுவதற்கான விசயமே எதுவுமில்லை. நடந்து முடிந்ததை முடிந்ததாகப் பாருங்கள் என்று பாடப் படுகிறது. உருவாகி, உருவாக்கப்பட்ட நாடகம்.... இந்த நாடகம் உங்களுடைய புத்தியில் உள்ளது. நாம் இதன் நடிகர்களாக இருக்கிறோம். நம்முடையது 84 பிறவிகளின் நடிப்பு துல்லியமாக அழிவற்ற தாக உள்ளது. யார் எந்த பிறவியில் என்ன நடிப்பை நடித்து வந்தனரோ அவர்கள் தான் அதையே செய்தபடி இருப்பார்கள். தன்னை ஆத்மா என புரிந்து கொள்ளுங்கள் என்று இன்றிலிருந்து 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்பும் உங்களுக்கு சொல்லப்பட்டது. கீதையிலும் வார்த்தைகள் உள்ளன. ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் ஸ்தாபனை ஆனபோது தேகத்தின் அனைத்து தர்மங்களையும் மறந்து தன்னை ஆத்மா என புரிந்து கொண்டு தந்தையை நினைவு செய்யுங்கள் என்று தந்தை சொல்லியிருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். மன்மனாபவ என்பதன் அர்த்தத்தை தந்தை நல்ல விதமாக புரிய வைத்திருக்கிறார். மொழியும் கூட இதே (இந்தி) தான். இங்கே பாருங்கள் எவ்வளவு எண்ணற்ற மொழிகள் உள்ளன. மொழிகள் குறித்தும் எவ்வளவு அடிதடிகள் நடக்கின்றன. மொழி இல்லாமல் வேலை நடக்காது. தாய்மொழிக்கே முடிவு கட்டும்படியாக மொழிகளைக் கற்றுக் கொண்டு வருகின்றனர். யார் அதிக மொழிகளைக் கற்கின்றனரோ அவருக்கு பரிசு கிடைக்கிறது. எத்தனை தர்மங்களோ அத்தனை மொழிகள் இருக்கும். அங்கேயோ நம்முடைய இராஜ்யம்தான் இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். மொழியும் ஒன்றுதான் இருக்கும். இங்கேயோ 100 மைல் தொலைவுக்கு ஒரு மொழி இருக்கிறது. அங்கே ஒரே மொழிதான் இருக்கும். இந்த அனைத்து விசயங்களையும் தந்தை வந்து புரிய வைக்கிறார் எனும்போது அந்த தந்தையையே நினைவு செய்தபடி இருங்கள். பிரம்மா மூலமாக சிவபாபா புரிய வைக்கிறார். ரதம் கண்டிப்பாக

தேவை அல்லவா? சிவபாபா நம் தந்தை ஆவார். என்னுடைய குழந்தைகள் எல்லைக்கப்பாற்பட்டவர்கள் என்று பாபா கூறுகிறார். பாபா இவர் மூலமாக படிப்பிக்கிறார் அல்லவா? ஆசிரியரை ஒருபோதும் கட்டி அணைத்துக் கொள்வதில்லை. தந்தையோ உங்களுக்கு கற்பிக்க வந்துள்ளார். இராஜயோகம் கற்றுத்தருகிறார் என்றால், ஆசிரியர் ஆகிறார் அல்லவா? நீங்கள் மாணவர்கள். மாணவர்கள் எப்போதாவது ஆசிரியரை கட்டி அணைத்துக் கொள்கிறார்களா? ஒரு தந்தையுடையவர் ஆகி பின் பிறரிடம் மனதை ஈடுபடுத்தக் கூடாது.

நான் உங்களுக்கு இராஜயோகம் கற்றுத்தர வந்துள்ளேன் என்று தந்தை கூறுகிறார். நீங்கள் சரீரதாரிகள், நான் அசரீரி மேலே இருக்கிறேன்.பாபா தூய்மையாக்க வாருங்கள் என்று சொல்கிறீர் கள் என்றால், நீங்கள் தூய்மையற்றவர்கள் என்றுதானே அர்த்தம்? பின் என்னை எப்படி கட்டி அணைக்க முடியும்? உறுதி மொழி கொடுத்து பின் தூய்மையற்றவராகி விடுகின்றனர். ஒரேடி யாக தூய்மை யடையும் போது கடைசி காலத்தில் நினைவிலும் இருப்பீர்கள், ஆசிரியரை, குருவை நினைத்தபடி இருப்பீர்கள். இப்போது கீழானவராகி விழுந்து விடுகின்றனர். இன்னும் நூறு மடங்கு தண்டனை ஏற்பட்டு விடுகிறது. இவர் இடையில் தரகரின் ரூபத்தில் கிடைத்துள்ளார், நினைவு அவரை (சிவபாபாவை) செய்ய வேண்டும். பாபா கூறுகிறார் நானும் அவரை கவனித்துக் கொள்ளும் குழந்தையாவேன். பிறகு நான் எப்படி அவரை கட்டி அணைத்துக் கொள்ள முடியும்? ஆனாலும் நீங்கள் இந்த சரீரத்தின் மூலமாக சந்திக்கிறீர்கள். நான் அவரை எப்படி அணைத்துக் கொள்வேன்? தந்தை சொல்கிறார் - குழந்தைகளே, நீங்கள் ஒரு தந்தையை மட்டும் நினைவு செய்யுங்கள், அன்பு செலுத்துங்கள். நினைவின் மூலம் சக்தி நிறைய கிடைக்கிறது. தந்தை சர்வசக்திவான் ஆவார். தந்தையிடமிருந்துதான் உங்களுக்கு இவ்வளவு சக்தி கிடைக்கிறது. நீங்கள் எவ்வளவு பலவானாக ஆகிறீர்கள். உங்களின் இராஜ்யத்தை யாரும் வெற்றி கொள்ள முடியாது. இராவண இராஜ்யமே முடிந்து விடுகிறது. துக்கத்தைக் கொடுப்பவர்கள் யாரும் இருக்கவே மாட்டார்கள். அது சுகதாமம் என்று சொல்லப்படுகிறது. இராவணன் முழு உலகில் அனைவருக்கும் துக்கம் கொடுக்கக் கூடியவன். விலங்குகள் கூட துக்கம் நிறைந்தவையாய் ஆகின்றன. அங்கேயோ விலங்குகள் கூட தங்களுக்குள் அன்புடன் இருக்கும். இங்கே அன்பே இல்லை.

இந்த நாடகம் எப்படி சுற்றுகிறது என்று குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். இதன் முதல், இடை, கடைசியின் ரகசியத்தை தந்தைதான் புரிய வைக்கிறார். சிலர் நல்ல விதமாக படிக்கின்றனர், சிலர் குறைவாக படிக்கின்றனர். அனைவருமே படிக்கின்றனர் அல்லவா? முழு உலகமுமே படிக்கும், அதாவது தந்தையை நினைவு செய்யும். தந்தையை நினைவு செய்வது - இதுவும் கூட படிப்பல்லவா! அந்த தந்தையை அனைவரும் நினைவு செய்கின்றனர், அவர் அனைவருக்கும் சத்கதி வழங்கும் வள்ளல், அனைவருக்கும் சுகத்தைக் கொடுப்பவர் ஆவார்.வந்து தூய்மையாக்குங்கள் என்று சொல்லவும் செய்கின்றனர் எனும்போது தூய்மையற்றவர்களாக இருக்கின்றனர் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. அவர் வருவதே விகாரம் நிறைந்தவர்களை நிர்விகாரிகளாக ஆக்குவதற்காக. ஓ அல்லா, வந்து எங்களை தூய்மையாக்குங்கள் என்று கூப்பிடவும் செய்கின்றனர். அவருடைய

வேலையே இதுதான், ஆகவேதான் அழைக்கின்றனர்.

உங்களுடைய மொழியும் கூட சரியானதாக இருக்க வேண்டும். அவர்கள் சொல்கிறார்கள் - அல்லாஹ், அவர்கள் சொல்கிறார்கள் - காட் (இறைவன்). இறைத்தந்தை என்றும் சொல்கின்றனர் ஆனாலும் கூட பின்னால் வருபவர்களின் புத்தி நன்றாக உள்ளது இவ்வளவு துக்கத்தை அடைவ தில்லை ஆக, நீங்கள் இப்போது முன்னால் அமர்ந்திருக்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள்? பாபாவை இந்த புருவ மத்தியில் பார்க்கிறீர்கள். பிறகு பாபா உங்கள் புருவ மத்தியில் பார்க்கிறார். யாருக்குள் பிரவேசம் செய்கிறேனோ அவரை பார்க்க முடியுமா? அவரோ பக்கத்தில் அமர்ந்திருக்கிறார், இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விசயமாக உள்ளது. நான் இவருக்கு (பிரம்மாவுக்கு) அருகாமை யில் அமர்ந்திருக்கிறேன். என் அருகில் அமர்ந்திருக்கிறார் என இவரும் புரிந்து கொள் கிறார். நாங்கள் முன்னால் இருவரையும் பார்க்கிறோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். தந்தை மற்றும் தாதா இருவரின் ஆத்மாக்களையும் பார்க்கிறீர்கள். பாப்தாதா என யாரைச் சொல்கிறோம் என்ற ஞானம் உங்களுக்குள் இருக்கிறது. ஆத்மா முன்னால் அமர்ந்திருக்கிறது. பக்தி மார்க்கத்தில் கண்களை மூடி அமர்ந்து கேட்கின்றனர். எந்தப் படிப்பும் அப்படி படிப்பதில்லை. ஆசிரியரை பார்க்க வேண்டியுள்ளது அல்லவா? இவர் தந்தையாகவும் இருக்கிறார், ஆசிரியராகவும் இருக்கிறார் எனும்போது முன்னால் பார்க்க வேண்டும். முன்னால் அமர்ந்து, கண்கள் மூடி, கொட்டாவி விட்டபடி இருப்பது - இப்படிபட்ட படிப்பு எதுவும் இருக்காது. மாணவர் ஆசிரியரை கண்டிப்பாக பார்த்தபடி இருப்பார். இல்லாவிட்டால் இவர் சோம்பலில் இருக்கிறார் என்று ஆசிரியர் சொல்வார். இவர் ஏதோ போதைப் பொருள் குடித்து விட்டு வந்துள்ளார் என்பார். பாபா இந்த உடலில் இருக்கிறார் என்பது உங்கள் புத்தியில் இருக்கிறது. நான் பாபாவைப் பார்க்கிறேன். கண்களை மூடி அமர்வதற்கு இந்த வகுப்பு ஏதோ பொதுவானதல்ல என்று தந்தை புரிய வைக்கிறார் பள்ளியில் எப்போதாவது யாரேனும் கண்களை மூடி அமர் கிறார்களா என்ன? மற்ற சத்சங்கங்கள் பள்ளி என்று சொல்லப்படுவதில்லை. கீதையை அமர்ந்து சொல்கிறார்கள் தான், ஆனால் அதனை பள்ளி என்று சொல்லப்படுவதில்லை. அவர் கண்ணால் பார்க்கும் தந்தை அல்ல. சிவனின் பக்தர்கள் என்றால் சிவனையே நினைவு செய்கின்றனர், காது மூலம் கதை கேட்டபடி இருக்கின்றனர். சிவனின் பக்தி செய்பவர்கள் சிவனைத்தான் நினைவு செய்ய வேண்டியிருக்கும். எந்த சத்சங்கத்திலும் கேள்வி கேட்டு பதில் சொல்லும் விசயம் நடப்பதில்லை. இங்கே நடக்கிறது. இங்கே உங்களின் வருமானம் அதிகமாக இருக்கிறது. வருமானத்தில் ஒரு போதும் கொட்டாவி வருவதில்லை. பணம் கிடைக்கிறது அல்லவா, எனவே குஷி ஏற்படுகிறது. கொட்டாவி என்பது துக்கத்தின் அடையாளமாகும். நோய் வந்தாலோ அல்லது திவால் ஆகி விட்டாலோ கொட்டாவி வந்து கொண்டே இருக்கும். பணம் கிடைத்துக் கொண்டே இருந்தால் ஒருபோதும் கொட்டாவி வராது. பாபா வியாபாரியாகவும் இருக்கிறார். இரவில் கப்பல் வந்தது என்றால் இரவில் விழிக்க வேண்டி இருந்தது. ஒரு சில பணக்கார பெண்மணிகள் இரவில் வந்தார்கள் என்றால் பெண்களுக்கென்றே திறந்து வைக்கப்பட்டிருக்கும். பாபாவும் கூறுகிறார் - கண்காட்சி முதலான இடங்களில் பெண்மணிகளுக்காக குறிப்பாக பகல் நேரத்தில் வைத்தால் நிறைய பேர் வருவார்கள். முக்காடு போட்டு வீட்டிலேயே அடைந்து கிடப்பவர்களும் வருவார்கள். மருமகள்கள்

தான் முக்காடு போட்டு வீட்டிலேயே அடைந்து கிடப்பார்கள். காரில் கூட திரை இருக்கும். இங்கேயோ ஆத்மாவைக் குறித்த விஷயம்தான் உள்ளது. ஞானம் கிடைத்து விட்டது என்றால் திரையும் திறந்து விடும். சத்யுகத்தில் முக்காடு முதலானவை இருப்பதில்லை. இது இல்லற மார்க்கத்திற்கான ஞானம் அல்லவா! நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. இந்த விளையாட்டு மிகவும் மகிழ்ச்சியானதாக உருவாகியுள்ளது. இதில் சுகம் மற்றும் துக்கத்தின் நடிப்பு பதிவாகியுள்ளது. ஆகையால் அடித்துக் கொண்டு அழ வேண்டிய விசயம் இல்லை. ஏற்கனவே உருவாகி, உருவாக்கப்பட்ட நாடகம் என்பது புத்தியில் உள்ளது, நடந்து முடிந்ததை நினைத்து கவலைப்படக் கூடாது.

2. இது பொதுவான வகுப்பு இல்லை, இதில் கண்களை மூடி அமரக் கூடாது. ஆசிரியரை முன்னால் பார்க்க வேண்டும். கொட்டாவி முதலானவை விடக் கூடாது. கொட்டாவி துக்கத்தின் அடையாளமாகும்.

வரதானம்: திருப்தி எனும் மூன்று விதமான சான்றிதழ் பெற்று தனது யோகி வாழ்வினை வெளிப்படுத்தும் சகஜயோகி ஆகுக

திருப்தி என்பது யோகி வாழ்வின் முதன்மையான லட்சியம், ஒருவர் தானும் சதா திருப்தியாக இருந்து, பிறரையும் திருப்தி செய்வாராயின் அவரது வாழ்க்கை பிறருக்கும் உதாரணமாகும். அறிவியல் சாதனங்கள் சுற்றுச் சூழ-ல் மாற்றத்தை ஏற்படுத்துவதைப் போன்று சகஜயோகியின் வாழ்க்கையும் பிறரது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும். யோகி வாழ்வின் மூன்று சான்றிதழ்கள்: (1) தன்மீது திருப்தி (2) பாபாவிடம் திருப்தி (3) லௌகீகம் மற்றும் அலௌகீக குடும்பத்தில் திருப்தி.

சுலோகன்: சுய ராஜ்யமெனும் திலகம், உலக நன்மைக்கான கிரீடம். நல்லதோர் மனோ நிலையெனும் ஆசனத்தில் அமர்ந்திருப்பவரே இராஜயோகி ஆவார்.